**ஆசியா அளவிலான பட்டறை :**
**IYAFA 2022-நிலைத்தத் தன்மையுள்ள, சரிநிகர் நிலையிலான மீன்பிடியைக் கொண்டாடுதல் (Celebrating Sustainable and Equitable Small-scale Fisheries)**

## அமர்வு 1: வள ஆதாரங்கள் சிறு வீத மீன்பிடி சமூகங்களுக்குக் கிட்டும் வகையில் இருத்தல்

**வாழும் உயிர் வள ஆதாரங்கள் அல்லது உயிர்களோடும், மீனவ சமூகங்களின் வாழ்வாதாரத்தோடும் தொடர்புடைய புவிப் பரப்பிலிருந்து பலன் பெறுவது அல்லது உரிமை கொண்டிருப்பது என்பதை மீன்பிடி தொழிலில் 'கிட்டும் வகையில்' என்ற சொற்றொடர் காட்டுகிறது.**

**பாரம்பரிய நிறுவனங்கள் அல்லது வழக்கம் சார்ந்த நிறுவனங்களின் உத்தரவுகள் உட்பட வேறு எந்த சட்டப்படியான நிறுவனக் கட்டமைப்பினைச் சார்ந்திராத ஒன்றாக கடல்சார் அல்லது உள்நாட்டு மீன்பிடி இருக்கும் என்றால் உயிருள்ள வள ஆதாரங்களைப் பயன்படுத்துவது 'சுதந்திரமான' ஒன்றாக இருப்பதை 'அனைவருக்கும் கிட்டுவது' என்ற சொற்றொடர் காட்டும்.**

மற்றபடி, (பாரம்பரிய, வழக்கத்தில் உள்ள அல்லது முறையான சட்டத்தின்படியான) நிறுவனக் கட்டமைப்பு ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றால், நிலம் மற்றும் மீன்வள ஆதாரங்களை அணுகுவதற்கு அளிக்கப்படும் உரிமை அல்லது பாதுகாப்பு தனிநபர்களுக்கு அல்லது கூட்டாக பலருக்கு அளிக்கப்பட்ட 'குத்தகை உரிமை' என்பதாக இருக்கும்.

தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற பின்புலத்தில் நிலம், மீன்வளம், வனக் குத்தகை குறித்த பொறுப்பார்ந்த ஆளுகைக்கான தன்னார்வ வழிகாட்டுதல்களுக்கு ( Voluntary Guidelines on the Responsible Governance of Tenure of Land, Fisheries and Forests in the Context of National Food Security -VGGT) பொருந்திப்போகும் வகையில், மீன்பிடியின் மதிப்புக் கூட்டு சங்கிலியில் உள்ள ஆண் மற்றும் பெண் மீனவர்கள், மீன் தொழிலாளர்கள் ஆகியோரின் குத்தகை உரிமையை வரையறுப்பதாகவும்

கட்டுப்படுத்துவதாகவும் குத்தகை முறைகள் இருக்க வேண்டும். அவர்கள் நிலம், நீர் அல்லது நீருயிர் வளங்களை எப்படி பயன்படுத்துவார்கள், எவ்வளவு காலம் பயன்படுத்துவார்கள், எந்த சூழலில் பயன்படுத்துவார்கள் என்பதை அது வரையறுப்பதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். குத்தகை உரிமை மற்றும் பொறுப்புகள் பொறுத்த வரையில், நிலமும் வனமும், மனித உரிமையை,உணவுப் பாதுகாப்பை, வறுமை ஒழிப்பை, நிலைத்த வாழ்வாதாரத்தை, சமூக ஸ்திரத்தன்மையை, குடியிருப்பு பாதுகாப்பை, கிராமப்புர வளர்ச்சியை யதார்த்தமாக்குவதில் மையமான பாத்திரம் வகிக்கின்றன என்பதால் பொறுப்பார்ந்த குத்தகை ஆளுகையை நடப்புக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை உறுதி செய்ய VGGT முயற்சிக்கிறது. (பத்தி 4.1).

மீன்பிடி என்ற சூழலில் குத்தகை உரிமை பற்றிய அம்சங்களில் பின்வருவன அடங்கியிருக்கும்: ஒரு தனி நபரோ, அல்லது சமூகமோ (யந்திரம் பொருத்தப்பட்ட அல்லது யந்திரம் இல்லாத) அனுமதிக்கப்பட்ட வலையையும் படகையும் (உதாரணம்: நிலையான, சூழப்பட்ட (encircling), இழுத்துச் செல்லப்படுகின்ற அல்லது அதுவல்லாத படகை) குறிப்பிட்ட நீர்ப்பரப்பில்/பகுதியில் குறிப்பிட்ட கால வரையறையில் குறிப்பிட்ட வள ஆதாரத்தை பிடிப்பதற்கான உரிமை . இது, எழுத்து வடிவத்தில் இல்லாத பழக்கவழக்கத்தின்படியானதாக/ உள்ளூர் சமூக ஒழுங்காக-நடத்தையாக இருக்கலாம் ; கூட்டுறவுகள் அல்லது சங்கங்களின் விதியாக இருக்கலாம் ; அரசின் விதியாக இருக்கலாம் ; அல்லது உரிமம் அல்லது அனுமதியாக இருக்கலாம். சில பூகோள பகுதிகளில், குத்தகை உரிமைகள் நல்ல வளர்ச்சி கண்டுள்ளன. மற்றவை மிகவும் மோசமான வளர்ச்சி கண்டுள்ளது மட்டுமல்லாமல், ஒத்திசைவு கொண்ட முழுமையாக மாற வேண்டுமானால் பலன் தரும் உரிமைகளாக அவை மாற வேண்டிய தேவை உள்ளது.

இந்த சூழலில், “கடல் வள ஆதாரங்களையும் சந்தையும் அணுகுவதற்கு சிறு வீத கைவினை மீனவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்" என்ற நிலைத்த வளர்ச்சி இலக்கு ( Sustainable Development Goal -SDG) 14b சொல்வதைக் கருத்தில்கொள்ள வேண்டும். இந்த கூற்று கடல்சார் சூழலில் குத்தகை உரிமையின் முக்கியத்துவத்தை பகுதியளவு பிரதிபலிக்கிறது,

மீன்பிடியை நடத்துவதற்காக, மீனைப் பதனப்படுத்துவதற்காக, சந்தைக்காக, மீனவ சமூகத்தின் நல்வாழ்க்கைக்காக, குறைந்தபட்சம் குடியிருப்புக்காகவும் பிற தேவைகளுக்காகவும் தற்காலிகமாகவோ



#

அல்லது நிரந்தரமாகவோ உள்ள உரிமை உட்பட நிலத்தின் மீதான குத்தகை உரிமையை உள்ளடக்கியதாக குத்தகை உரிமை உள்ளது.

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்காக நிலைத்த சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்காக தன்னார்வ வழிகாட்டுதல்களின்படி ( SSF வழிகாட்டுதல்களின்படி), தேசிய எல்லைக்குள், சிறுவீத மீனவர்கள், குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பிரிவினர் மீன் பிடிப்பதற்கான தனியொரு மண்டலத்தை உருவாக்கி அமலாக்கம் செய்தல் போன்ற, கடல் வளத்தை அணுகுவதில் முன்னுரிமை போன்றவற்றை குத்தகை உரிமை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

கடற்கரை வாழ் மக்கள் அல்லது நதிக்கரையோர மக்களின் நலனுக்கு, நிலம் மற்றும் அதன் அருகாமை நீர்நிலைகள் மீதான குத்தகை உரிமை மிக அதிக முக்கியத்துவம் உடையது என்றாலும், பெருங்கடல்சார் மற்றும் உள்நாட்டு மீன்வளம், அத்துடன் கடற்கரை, ஆற்றோரப் பகுதிகள் தொடர்பான குத்தகை ஏற்பாடுகள், வெளியாரின் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் அளவுக்கு இல்லை. மேலும், அவற்றின் அமைப்பு கட்டமைப்பு, கைவினை சிறுவீத மீனவ சமூகங்களின் குத்தகை உரிமையைப் பாதுகாக்கும் அளவுக்கு இனித்தான் பல இடங்களிலும் முன்னேற்றம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. இந்த சவாலை இனித்தான் தீர்த்துவைக்க வேண்டியுள்ளது.

### குழு விவாதத்துக்கான கேள்விகள்

1. மீன் வள மதிப்பு கூட்டு சங்கிலியில் உங்களின் வேலைக்குத் தேவையான வீடு, மற்றும் பிற நில வள ஆதாரங்கள் உங்களுக்குத் தனிநபர் என்ற முறையிலோ அல்லது சமூகக் கூட்டு என்ற முறையிலோ குத்தகையாகக் கிடைத்து அதனை அனுபவிக்கிறீர்களா? இந்த குத்தகை உரிமை ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் நிலையில் கிடைக்கவும் ஒன்றே போன்ற பாதுகாப்பு அளிக்கவும் என்ன செய்ய வேண்டும்?

2.கடற்கரை மற்றும் நதி சார் பகுதிகளில் பெண் மீனவர்களுக்கும் ஆண் மீனவர்களுக்கும், மீன் பதனப்படுத்துதலில், மீன் வள ஆதாரங்களின் குத்தகை உரிமை கிடைக்கிறதா? அவை முறையான உரிமைகளா? அல்லது பாரம்பரிய/ நாட்டு வழக்கப்படியான/ உள்நாட்டு உரிமைகளா? உள்ளூர் நீர் சார்ந்த மற்றும் கடற்கரை உயிர்ச்சூழலை மீட்டெடுப்பது, பேணுவது, பாதுகாப்பது, இணைந்து மேலாண்மை செய்வது ஆகியவை சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள சமூகங்களின் குத்தகை உரிமையில் அடங்கியிருக்கிறதா?

3. நிலத்தையும் நீர்நிலைகளையும் பயன்படுத்துவதில் மீனவ சமூகங்கள் எவ்வகையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறார்கள்? இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு நிற்பதிலும், வெற்றி கொள்வதிலும் குத்தகை உரிமைகள் எந்த அளவுக்கு உதவியாக இருக்கின்றன?

3. நில்ம் மற்றும் நீர்நிலை மீதான சிறுவீத மீன்பிடி சமூகத்தின் குத்தகை உரிமைகளை மனம்போன போக்கில் ரத்து செய்வதும் வெளியேற்றம் செய்யும் நிகழ்வுகள் உண்டா?

4. இயற்கை பேரழிவின் காரணமாக, அல்லது மோதல்களின் காரணமாக இடப்பெயர்ச்சிக்கு ஆளான சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் தங்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதிகளை மீண்டும் பெறுவதற்கான முன்முயற்சிகள் ஏதும் நடந்துள்ளனவா?

5. மிகப்பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால், அர்த்தமுள்ள கலந்தாலோசனைகள் நடைபெற்றிருக்கின்றனவா? கலந்தாலோசனைகளில் சமூக பொருளாதார சுற்றுச்சூழல் தாக்க ஆய்வறிக்கைகள் முன்வைக்கப்பட்டனவா?

6. குத்தகை உரிமை தொடர்பான தாவாக்களைத் தீர்ப்பதற்கும், மறு ஒப்படைப்பு, எதிர்கால இழப்புகளுக்கு எதிரான பாதுகாப்பு, நியாயமான இழப்பீடு, ஏற்பட்ட சேதங்களை சீர் செய்தல் போன்றவற்றைப் பெற்றுத் தருவதற்கும் பலன்தரும் வகையிலான அமைப்பு இருக்கிறதா?



#